2. அறிவிப்பு (தொடர்ச்சி)

(ஈ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 12-2-1980 பகல் சுமார் 12-50 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து திரு. கோ. செல்வம், திரு. ஏ. ஜோசப் மற்றும் திரு.ஜே. அமரேந்திரன் ஆகியோர் கோஷங்கள் எழுப்பி, துண்டுப் பிரசுரங்களை பேரவையில் வீசியுள்ளனர், அவர்கள் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். விசாரணை நடந்து கொண்டு இருக்கிறது.

அவர்களது இச்செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

3. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை குறித்து

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :-

''இன்று 12-2-1980 பகல் சுமார் 12-50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டு துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்து உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை-7, வடமலைப்பிள்ளை தெரு, 59 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. கோவிந்தசாமி அவர்கள் மகன் திரு. கோ. செல்வம் என்று கூறிக் கொள்ளும் நபரும், சென்னை-12. ஓட்டேரி, பிரிக்லின் ரோடு, 162 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. ஏ. டி, அந்தோணி அவர்கள் மகன் திரு. ஏ. ஜோசப் என்று கூறிக்கொள்ளும் நபரும், சென்னை-7, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, 152 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. வால்டர் அவர்கள் மகன் திரு. ஜே, அமரேந்திரன் என்று கூறிக்

1980 பிப்ரவரி 12] [திரு. கி. மனோகரன்]

கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.''

திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் செய்தது குற்றம் என்பதை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். இருந்தாலும் 7 நாட்கள் என்பது மிகவும் அதிகமாக உள்ளது. ஏற்கெனவே இம்மாதிரி செய்கைகளுக்கு 3 நாட்கள் தான் கொடுத்திருக்கிறோம். ஆகவே அதைக் கொஞ்சம் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் சொல்ல வருவது வேறு விஷயம், இருந்தாலும் இதற்குத் தொடர்புடையதுதான். இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் பேசுகிறார்கள் என்ற காரணத்திற்காக வெளியே கெடுபிடி தாங்க முடியவில்லை. எதிர்க் கட்சித் தலைவருக்கு என்று ஒரு ரூம் இருக்கின்றது. அதிலே உட்கார வைப்பதற்காக கூட்டிக்கொண்டு வந்தால் கூட தடுத்து நிறுத்திவிடுகிறார்கள், நீ மட்டும் உள்ளே வா, மற்றவர்கள் வரக் கூடாது என்று சொல்கிறார்கள்.

அடுத்து பொதுவாகவே நாமும் சத்தம் போடுகிறோம் சில சமயங்களில். இது அடிக்கடி நடக்கின்றது. ஆனால் பார்க்க வருகின்றவர்கள் இப்படி என்றைக்கோ ஒருநாள் நடந்து கொள்கிறார்கள், அவர்கள் அன்னை இந்திரா வாழ்க என்று சொன்னார்கள், அது ஒரு பெரிய குற்றம் கிடையாது. இவ்வாறு முன்பு தண்டனை அளிக்கும்போது கூட நான் சொன்னேன், தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன், இவர்களை கிரிமினல் குற்றவாளிகளோடு கொண்டுபோய் சேர்த்து விடுகிறார்கள் என்று. ஏற்கெனவே ஒருவாரம் தண்டனை என்று தீர்மானம் கொண்டுவந்தபோதே நான் அவை முன்னவர் அவர்களிடம் சொன்னேன், அரசாங்க உத்தரவுக்கு விரோதமாக செய்யக் கூடாது என்று. இந்த மாதிரி செய்வது எல்லாம் காந்திய வழி என்று விளக்கம், நீங்களே ஜி ஓ.வி-லே கொடுத்திருக்கிறீர்கள். அதாவது பொருளுக்குச் சேதம் இல்லாமல், ஆளை க்ளோஸ் பண்ணாமல் இந்த மாதிரி சத்தியாகிரகமான முறையில் செய்வது காந்திய வழி என்று அந்த ஜி. ஓ. வி-லே உள்ள டெஃபினிஷனிலே வருகிறது. ஆகவே இப்படி காந்திய வழியில் ஈடுபட்ட ஒரு காந்திய வாதியை கிரிமினல் குற்றவாளிகளோடு கொண்டுபோய் அடைப்பது தவறு. ஆகவே அப்படிப்பட்டவர்

களுக்கு என்று தனியாக ஒரு பங்களா வாங்கினால் கூட தவறு கிடையாது. மொரார்ஜி தேசாய்க்கு பங்களா இல்லையா ? ஆகவே ஒரு பங்களா வாங்கி அதிலே வைத்தாலும் அவர்களுக்கு 7 நாட்கள் சாப்பாடு போட்டாலும் எங்களுக்குச் சந்தோஷம் தான். ஆனால் நடத்தப்படக்கூடிய முறை என்ன ? அந்த முறை அரசாங்க உத்தரவுக்கு விரோதமாக இருக்கிறது என்பதுதான் நான் சொல்வது. சென்ற முறை கூட இந்தமாதிரி குற்றவாளிகளை சென்ட்ரல் ஜெயிலிலே அடைத்து வைத்திருந் தார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் மாடத் திலேயிருந்து அன்னை இந்திரா வாழ்க என்று சொல்லி துண்டு பிரசுரம் வீசியது சரி என்று சொல்ல விரும்புகிறாரா என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : சுதந்திரத்திற்கு முன்னாலே வெடி குண்டையே வீசினார்கள். (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துண்டு பிரசுரத்தை நேரிடையாக பேரவையில் வீசுவதை விரும்புகிறாரா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : இது வெறும் துண்டு பிரசுரம் தானே. அந்தக் காலத்தில் அவர்கள் வெடி குண்டை வீசினார்கள். பகத்சிங் போன்றவர்கள் அப்படி வீசவில்லை என்றால், இன்றைக்கு நீங்களும் நானும் இப்படி இங்கே உட்கார்ந்திருக்க முடியாது. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

''இன்று 12–2–1980 பகல் சுமார் 12.50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டு துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்து உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை-7, வடமலைப்பிள்ளை தெரு, 59ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. கோவிந்தசாமி அவர்கள் மகன் திரு. கோ. செல்வம் என்று கூறிக்கொள்ளும் நபரும், சென்னை-12, ஓட்டேரி, பிரிக்லின் ரோடு, 162ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. ஏ. டி, அந்தோணி அவர்கள் மகன் திரு. ஏ. ஜோசப் என்று கூறிக்கொள்ளும் நபரும், சென்னை-7, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, 152ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. வால்டர் அவர்கள் மகன் திரு.

1980 பிப்ரவரி 12] [பேரவைத் தலைவர்]

ஜே. அமரேந்திரன் என்று கூறிக்கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை அளிக்கப் பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக் கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 5 நிமிடங் களுக்கும் குறைவாக இருப்பதினால் உறுப்பினர் திரு. அழகிரிசாமி அவர்கள் இன்று பேச விரும்ப மாட்டார் என்று கருதுகிறேன். அதனால் பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

—எதுவுமில்லை—

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

* 13. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 183 ஆம் பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1980).

* 14. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1980).

* 25. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1980).

* 16. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும்

*8-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.